மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Sir, there is only one kind of electricity tariff both for power used during peak hour and for power consumed during ordinary period. Will the Government consider the introduction of two kinds of tariff separately for peak hour and ordinary period and the fixation of higher tariff for peak hour so that people may not go in for peak hour consumption?

THE HON. THIRU S. RAMACHANDRAN : This is another form of preventing the consumers from utilising the energy during peak hour. Now the rules in force provide for disconnection of such services where they are found using energy during peak hours, apart from the levy that is imposed on such people.

*Private Tanks.*

* 171 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the farmers of Kanyakumari district requesting the Government to take over all private tanks receiving water from Government reservoirs; and

(*b*) if so, the action taken thereon?

தனியார் குளங்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க நீர்த் தேக்கங்களிலிருந்து நீர் பெறுகிற தனியார் குளங்களை எல்லாம் அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளிடமிருந்து முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

1978 மார்ச் 15]

**திரு. எம். சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை குளங்கள் தனியார் கையில் இருந்துகொண்டு, அரசாங்கம் நிருவகித்து வருகிற அணை களிலிருந்து தண்ணீர் பெறுகின்றன ? அவற்றை அரசு தன்னுடைய குளங்களாக அறிவிப்பதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவில் உள்ள அழகிய பாண்டியபுரம் கிராமத்தைச் சார்ந்த தட்டான் பள்ளம் குளம், தோவாளைத் தாலுகா செண்பகராமன்புதூர் கிராமத்தைச் சார்ந்த தேவர் குளம் மற்றும் தோவாளை தாலுகா செண்பகராமன்புதூர் கிராமத்தைச் சார்ந்த புதுக்குளம் ஆகிய மூன்று குளங்கள் தனியார்களிடம் இருக்கின்றன. 1948 ஆம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டமும் அதன் பின் 1974 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட திருத்தமும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டம் மாற்றப்பட்ட பகுதியானதால் (Transferred territory) எந்த அளவுக்கு இந்தச் சட்டங்களை நீட்டித்து இவைகளை எடுத்துக் கொள்ளலாம் என்பது பற்றி வருவாய்த் துறை பரிசீலித்து வருகிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** கழிந்த 10 ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. தனியார் குளங்கள் முழு அளவில் அரசு நிருவாகத்தில் இருந்து வருகிற அணைகளிலிருந்து தண்ணீரை எடுத்து வருகின்றன. அதிலும் பெரு நிலச்சுவான்தார்கள் இந்தக் குளங்களைத் தங்களுடைய சொந்தக் குளங்கள் என்று கூறி, சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு இந்தத் தண்ணீர் கிடையாது என்று சொல்லி, தண்ணீர் விட மறுக்கிறார்கள். இதனால் மற்ற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் பல சிக்கல்கள் உருவாகின்றன என்பதால், இவைகளைத் தீர்க்கும் வகையில் அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசு விரைவில் ஆவன செய்யும் என்று கூறிக்கொள்கிறேன்.

## Janata Hotels.

*172 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(*a*) whether the Government have proposed to the India Tourism Development Corporation the construction of Janata Hotels in the State :

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the details thereof, including the places in which such hotels are proposed to be constructed?